# ஆண்டறிக்கை 2019



முனைவர் சுஜீதா ஜெகஜீவன்
பிரதிப் பணிப்பாளர்
*பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்*

*2020 மே*

# நியதித் தேவைப்பாடு




**நாணய விதிச் சட்டத்தின் 35ஆம் பிரிவு:**

*...ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து நான்கு மாதங்களுக்குள், நாணயச் சபையானது நிதித் துறைக்குப் பொறுப்பான அமைச்சரிடம் மத்திய வங்கி நிலைமை, நிதியியல் ஆண்டுப்பகுதியில் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிமுறைகளின் ஆய்வினையும் அக்கொள்கைகளையும் வழிமுறைகளையும் தூண்டிய பொருளாதார மற்றும் நிதியியல் சூழல்கள் பற்றிய ஆய்வுகள் மீதான ஆண்டறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கவும் அதனை வெளியிடவும் வேண்டும்...*

**இது 2019ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் 70ஆவது ஆண்டறிக்கையாகும்.**

# ஆண்டறிக்கையின் உள்ளடக்கம்

**தொகுதி I** - பொருளாதாரத்தின் நிலை, அதன் செயலாற்றம், கொள்கைகள் மற்றும் பிரச்சனைகள்

புள்ளிவிபரப் பின்னிணைப்பு

சிறப்புப் புள்ளிவிபரப் பின்னிணைப்பு

**தொகுதி II** - மத்திய வங்கியின் கணக்குகள் மற்றும் தொழிற்பாடுகள்

- மத்திய வங்கி மற்றும் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் நிறுவனங்களின் தொழிற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் இவ்வாண்டுக் காலப்பகுதியில் அரசாங்கம் மற்றும் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட நிருவாக வழிமுறைகள்

- மத்திய வங்கி மற்றும் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் நிறுவனங்களின் தொழிற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான 2019ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்

# பொருளாதாரத்தின் நிலை அதன் செயலாற்றம், கொள்கைகள் மற்றும் பிரச்சனைகள்

1. பொருளாதார, விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்
2. தேசிய வெளியீடு, செலவினம் மற்றும் வருமானம்
3. பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு
4. விலைகள், கூலிகள், தொழில்நிலை மற்றும் உற்பத்தித்திறன்
5. வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்
6. இறைக்கொள்கையும் அரச நிதியும்
7. நாணயக் கொள்கை, வட்டி வீதங்கள், பணம் மற்றும் கொடுகடன்
8. நிதியியல் துறை அபிவிருத்தி மற்றும் முறைமை உறுதித்தன்மை

# அத்தியாயம் 1

## பொருளாதார, விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

ஆண்டறிக்கை 2019

தொகுதி I

இலங்கை மத்திய வங்கி

# 2019இல் இலங்கையின் பொருளாதாரத்தின் கதை


**பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு வழிமுறைகள்**

பணவீக்கம்

**பாரிய வெளிநாட்டுத் துறை உறுதிப்பாடு**


- குறுக்கமடைந்த வர்த்தக மற்றும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகள்
- உறுதியான செலாவணி வீதம்
- உயர்ந்த ஒதுக்குகள்


**இறை நழுவல்கள்**




வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை (மொ.உ.உற்பத்தியின் % ஆக)

**குறைந்த வளர்ச்சி**




**வளர்ச்சி மேலும் தளர்வுற்றது**




**வியாபார நம்பிக்கை**

**குறை வடைந்த கேள்வி**




உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள்



*இருந்தபோதும் வானிலையுடன் தொடர்பான இடையூறுகள் தற்காலிக அதிகரிப்பிற்குக் காரணமாயின*


**மோசமான நிதியியல் துறைச் செயலாற்றம்**

**தனியார் துறை கொடுகடன் வளர்ச்சி**




தனியார் துறை கொடுகடன் வளர்ச்சி(ஆண்டிற்கு ஆண்டு %)

பணவீக்கம் அதன் இலக்கிடப்பட்ட மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது…






உலகளாவிய அபிவிருத்திகளும் உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மீது கணிசமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன

**இ.ம. வங்கியின் கொள்கை நிலை**


- **தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை**
- *ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கையின் மூலம் ஆதரவளிக்கப்பட்டது*



இலங்கையில் பொருளாதார நடவடிக்கைக்கான உதவி

# இலங்கையின் முன்னோக்கிய பயணம்: 2020 இலும் அதற்கு அப்பாலும்

பொருளாதாரத்தினை மீளெழுச்சிப்படுத்துவதற்காகவும் வியாபார மனோபாவத்தினை மேம்படுத்துவதற்காகவும் 2020இன் தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகளுக்கு உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கை நேரகாலத்துடன் அதன் பதிலிறுப்புக்களைக் காட்டத் தொடங்கியமையினால் சரியான பாதையில் பயணிக்கிறது...



கொரவிட்-19

முடக்கம்

கட்டுப்படுத்தும் வழிமுறைகள்




உலகளாவிய பொருளாதாரத்தில் எறிவுசெய்யப்பட்ட சுருக்கம்

பொருளாதார நிச்சயமற்றதன்மை

2020 இல்

இலங்கை அண்மைய காலத்தில் <u>கடுமையாகப்</u> பாதிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது

- மொ.உ.உ வளர்ச்சி
- இறைத் துறை
- வெளிநாட்டுத் துறை
- நிதியியல் துறை

***இடைவெளிகள் கட்டியெழுப்பப்பட்டதனூடாக பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் மீதான சுமையினைத் தளர்த்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு இலங்கை மத்திய வங்கி ஆதரவளிக்கக்கூடியதாகவிருந்தது...***

***நாணயக் கொள்கை இடைவெளி***

குறைந்த பணவீக்கம்

***வங்கித்தொழில் துறை இடைவெளி***

மூலதனம் மற்றும் திரவத்தன்மைத் தாங்கிருப்புக்களை பேணுதல்

*தொற்றினால்* ***தற்காலிகப் பின்னடைவுகள்*** *ஏற்படுத்தப்பட்ட போதும், பொருத்தமான வளர்ச்சி, ஆதரவுச் சீர்திருத்தங்கள் சரியான நேரத்தில் நடைமுறைக்கிடப்பட்டன....*

- நீண்ட கால அமைப்பியல் பிரச்சனைகளை கட்டுப்படுத்துவதற்கும் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிபபதற்கும்
- ஏற்றுமதி சார்ந்தவற்றை மேம்படுத்தல்
- வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்தல்
- புத்தாக்கத்திற்கு வசதியளித்தல்
- காரணி உற்பத்தித் திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்தல்
- கொள்கைத் தாங்கிருப்புக்களை மேம்படுத்தல்

**இலங்கையில் நீடித்துநிலைத்திருக்கக்கூடியதும் சமத்துவமானதுமான பொருளாதார வளர்ச்சி**



# அத்தியாயம் 2

தேசிய வெளியீடு, செலவினம் மற்றும் வருமானம்

# அத்தியாயம் 3

பொருளாதாரம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு

# அத்தியாயம் 4

விலைகள், கூலிகள், தொழில்நிலை மற்றும் உற்பத்தித்திறன்

ஆண்டறிக்கை 2019


தொகுதி I

இலங்கை மத்திய வங்கி

# உண்மை நியதிகளில் பொருளாதாரம் 2.3 சதவீதத்தினால் விரிவடைந்தமையின் காரணமாக 2019இல் பொருளாதார வளர்ச்சி மிதமடைந்தது...

- **2019இல் மிதமான வளர்ச்சி வீதங்கள் காணப்பட்டவெனினும், பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளும் நேர்க்கணிய வளர்ச்சியைப் பதிவுசெய்தன**
  - தீவிரமான வானிலை நிலைமைகள் **வேளாண்மைத் துறையினைக்** குறிப்பாக தேயிலை, இறப்பர், கடல் மீன்பிடி மற்றும் நீரியல் மீன்வளர்ப்பினைப் பாதித்தன
  - **கைத்தொழில் துறை,** கட்டடவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட மீளெழுச்சியின் ஆதரவுடன் 2.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது
  - **பணிகள் துறையின்** வளர்ச்சி 2.3 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்தமைக்கு தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபானப் பணிகளின் நடவடிக்கைகள் சுருக்கமடைந்தமையும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் மெதுவடைந்தமையுமே காரணங்களாகும்.

## ஆண்டு மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதம் (அ)




(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)


*மூலம்* : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

## இலங்கை உயர் நடுத்தர வருமான நாடாக வகைப்படுத்தப்பட்டிருக்கிறது...

- **எனினும் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2018இன் ஐ.அ.டொலர் 4,079 இலிருந்து 2019இல் ஐ.அ.டொலர் 3,852 இற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு**
  - குறைவடைந்த பொருளாதார வளர்ச்சி
  - ஆண்டுச் சராசரி நியதிகளில் ரூபா தேய்வடைந்தமை

  என்பன காரணங்களாயமைந்தன

## தலைக்குரிய மொ.உ.உற்பத்தி





(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் (2010 அடியாண்டு) மதிப்பீடுகளையும் பிந்திய குடித்தொகை தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டது

*மூலம்* : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

## வளர்ச்சிக்கு, நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட விரிவும் தேறிய வெளிநாட்டுக் கேள்வியில் ஏற்பட்ட மேம்பாடும் ஆதரவாக அமைந்தன...

- **2019இல் மொ.உ.உற்பத்தியின் செலவின அணுகுமுறைகளின்படி**
  - நுகர்வுச் செலவினம் (மொ.உ.உற்பத்தியின் 78.7 சதவீதம்) 6.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது
  - முதலீடுகள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து 5.9 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்தன
  - மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முதலீடுகள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 30.4 சதவீதப் பங்கிலிருந்து 27.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன
- **தேறிய வெளிநாட்டுக் கேள்வி தொடர்ந்தும் எதிர்க்கணியமாக இருந்த போதும் இறக்குமதிகளில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியின் காரணமாக வர்த்தக நிலுவையில் முன்னேற்றமொன்று பதிவுசெய்யப்பட்டது**
- **மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டு சேமிப்புக்கள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 23.0 சதவீதத்திலிருந்து 2019இல் 21.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது**
- **எனினும், முதலீட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட உயர்ந்த சுருக்கத்தின் காரணமாக,**
  - மொ.உ.உற்பத்தியின சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்பு – முதலீட்டு இடைவெளி 2018இன் 7.4 சதவீதத்திலிருந்து 2019இல் 6.1 சதவீதத்திற்குக் குறுக்கமடைந்தது
  - மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்பு – முதலீட்டு இடைவெளி 2018இன் 3.1 சதவீதத்திலிருந்து 2019இல் 2.1 சதவீதத்திற்கு குறுக்கமடைந்தது

**சேமிப்புக்கள், முதலீடுகள் மற்றும் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)**





*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி


# குறைவடைந்த பொருளாதார நடவடிக்கையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தொழிலின்மை வீதம் 2018இன் 4.4 சதவீதத்திலிருந்து 2019இல் 4.8 சதவீதத்திற்கு அதிகரித்தது...

- தொழிற்படை பெண்கள் பங்கேற்பு வீதத்தில் உயர்ந்த பால் இடைவெளியினைக கொண்ட முதல் இருபது நாடுகளிடையே இலங்கையும் தொடர்ந்து காணப்படுகிறது.
- இளைஞர், பெண்கள், கல்வியில் தகைமைபெற்ற வகையினரிடையே தொழிலின்மை வீதம் தொடர்ந்தும் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது.

**தொழிலாளர் சந்தை - 2019 (அ)**




**தொழிலின்மை வீதம்**




*மூலம்* : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

# இறுக்கமான இறைத் தடைகள் காணப்பட்டமைக்கிடையிலும் 2019இல் அரசாங்கம் நாட்டின் பொருளாதார உட்கட்டமைப்பினை விரிவாக்குவதற்கான அதன் முயற்சிகளைத் தொடர்ந்தது….

- தென்பகுதி விரைவுப் பாதை விரிவாக்கச் செயற்றிட்டம் மற்றும் வெளிச்சுற்று வட்ட நெடுஞ்சாலைச் செயற்றிட்டம் - கட்டம் III நிறைவடைந்தது





- உமா ஓயா செயற்றிட்டத்தின் கீழ் நான்கு நீர்த்தேக்கங்கள் 2019 ஒத்தோபரில் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டன



- கொழும்பு நகரச் செயற்றிட்டத்தின் நில மீட்பு நடவடிக்கைகள் 2019 சனவரியில் நிறைவடைந்தன.
- இச்செயற்றிட்டத்தின் கீழ் மீட்கப்பட்ட நிலம் கொழும்பு மாவட்டத்தின் ஒரு பகுதியாகவும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் நகர அபிவிருத்திப் பிரதேசமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது



## உட்கட்டமைப்பில் அரசாங்கத்தின் முதலீடு

| ஆண்டு | பொருளாதாரப் பணிகள் | | சமூகப் பணிகள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. மில். | மொ.உ.உ இன் % | ரூ. மில். | மொ.உ.உ இன் % | ரூ. மில். | மொ.உ.உ இன் % |
| 2015 | 429.0 | 3.9 | 124.4 | 1.1 | 553.4 | 5.1 |
| 2016 | 424.0 | 3.5 | 117.3 | 1.0 | 541.3 | 4.5 |
| 2017 (அ) | 474.1 | 3.6 | 135.4 | 1.0 | 609.5 | 4.6 |
| 2018 (அ) | 437.9 | 3.3 | 133.2 | 1.0 | 571.1 | 4.3 |
| 2019 (ஆ) | 475.9 | 3.4 | 112.9 | 0.8 | 588.8 | 4.1 |


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலங்கள்:* நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

# அதிகரித்துவரும் வலுவிற்கான கேள்வியைப் பூர்த்தி செய்வதில் நாடு சவால்களை எதிர்நோக்கியது...


- மின்வலு உருவாக்கம் 15,879 கிவாமா இற்கு 3.3 சதவீதத்தினால் அதிகரித்தது
- மின்வலு விற்பனை 3.7 சதவீதத்தினால் 14,612 கிவாமா இற்கு அதிகரித்தது
- வரண்ட வானிலை நிலைமைகள், குறைந்த நீர்மின் வலு உருவாக்கத்தை தோற்றுவித்தன. எனினும், அதிகரித்துவரும் மின்வலுவிற்கான கேள்வி எரிபொருள் எண்ணெய் மற்றும் நிலக்கரி வலு உருவாக்கத்தின் மூலம் ஈடுசெய்யப்பட்டது.
- இலங்கை மின்சபை 2019 மாச்சிலும் ஏப்பிறல் தொடக்கப்பகுதியிலும் மின்வெட்டுக்கு அட்டவணையிட்டிருந்தது.

**மின்வலு உருவாக்கக் கலப்பு**




*மூலம்* : இலங்கை மின்சார சபை

**பன்னாட்டுச் சந்தையில் மசகெண்ணெயின் (பிறெண்ட்) சராசரி விலை மற்றும் இ.பெ.கூட்டுத்தாபனத்தின் மசகெண்ணெய் இறக்குமதி விலை**





*மூலம்* : புளும்பெர்க்
இலங்கைத் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

- சராசரி பிறெண்ட் விலை 2018இன் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 71.76 இலிருந்து 2019இல் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 64.04 இற்கு 10.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.
- பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டுச் சில்லறை விலைகள் 2019 செத்தெம்பர் வரை கிரமமான முறையில் திருத்தப்பட்டன.
- உள்நாட்டுச் சந்தையில் பெற்றொலிய உற்பத்திகளின் விற்பனைகள் 2019இல் 4.8 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு எரிபொருள் எண்ணெயை அடிப்படையாகக் கொண்ட வலு உருவாக்கம் அதிகரித்தமையும் போக்குவரத்துத் துறையிலிருந்தான உயர்ந்த கேள்வியுமே காரணமாகும்.
- 2020 சனவரி 3ஆம் வாரத்திலிருந்து கொவிட்-19 தொற்றின் பரவல் காரணமாக எண்ணெய் விலைகளில் கடுமையான குறைப்பொன்று அவதானிக்கப்பட்டது.

# 2019இல் தொடர்பூட்டல் துறை விரிவடைந்த வேளையில் நீர்வழங்கலை அதிகரித்துக் கொள்வதற்கு அரசாங்கம் கடுமையாக முயற்சித்தது

## தொலைபேசி நுழைவு




*மூலம்* : இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

- **தொலைபேசி நுழைவு:**
  ஒவ்வொரு 100 ஆட்களுக்கும் 161.4 இணைப்புக்கள்
- **இணையத்தள நுழைவு:**
  ஒவ்வொரு 100 ஆட்களுக்கும் 61.5 இணைப்புக்கள்


பாதுகாப்பான குடிநீரின் கிடைப்பனவு
– 91.9% (2019)
குழாய்வழி நீரின் கிடைப்பனவு
– 51.8% (2019)






# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் காரணமாக 2019இல் உள்நாட்டுப் போக்குவரத்து நடவடிக்கைகள் மெதுவடைந்த போதும் துறைமுகத் தொழிற்பாடுகள் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன...

பயணிகள் கி.மீ. (பில்.) இ.போ.ச





பயணிகள் கி.மீ. (பில்.) தனியார்துறை







வீதிப் போக்குவரத்து

பயணிகள் கி.மீ. (மில்.)





சரக்கு தொன் கி.மீ. (மில்.)







புகையிரதப் போக்குவரத்து

பயணிகள் கி.மீ. (மில்.)




சரக்கு (மெ.தொன் ’000.)







வான்வழிப் போக்குவரத்து

2019இல் வீதி, புகைவண்டி மற்றும் வான் போக்குவரத்து என்பனவற்றினூடான பயணிகள் மற்றும் பொருள் போக்குவரத்து இரண்டும் வீழ்ச்சியடைந்தமைக்கு பாதுகாப்புக் கரிசனைகள் மற்றும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட குறைப்பு என்பனவற்றினைத் தொடர்ந்து மக்கள் நகர்வுகள் குறைவடைந்தமையே காரணமாகும்.

## கொள்கலன் கையாளல், மாற்றிக் கப்பலேற்றலின் அளவு மற்றும் கப்பல்களின் வருகை




*மூலம் : இலங்கை துறைமுக அதிகாரசபை*

**மொத்தச் சரக்குக் கையாளல் –**

106.98 மில். மெ.தொன்களுக்கு 1.9 சதவீதத்தினால் அதிகரித்தது

**கொள்கலன் கையாளல் –**

7.2 மில். 20 அடிக்குச் சமனான அலகுகளுக்கு 2.6 சதவீதத்தினால் அதிகரித்தது

**மாற்றிக் கப்பலேற்றல் கையாளல் –**

5..96 மில். 20 அடிக்குச் சமனான அலகுகளுக்கு 4.4 சதவீதத்தினால் அதிகரித்தது

**இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்ந்து 2ஆவது ஆண்டாக குளோபல் போட்ஸ் போரத்தினால் வழங்கப்பட்ட 2019ஆம் ஆண்டிற்கான துறைமுக அதிகாரசபைக்கான விருதினை வென்று கொண்டது**

கொழும்பு பன்னாட்டு கொள்கலன் முனைக்கோடி தொடர்ந்து 3ஆவது ஆண்டாக “4 மில்லியன் 20 அடிக்குச் சமனான அலகுகளின் வகைகளின் கீழ்” ஆசியாவின் மிகச் சிறந்த கொள்கலன் முனைக்கோடி என்ற விருதினைப் பெற்றுக்கொண்டது

# கல்வி மற்றும் நலப் பணிகளை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் அதன் முயற்சிகளை மேற்கொண்டது...





- அனைவரும் சமத்துவமான கல்வியைப் பெறுவதற்கான தன்மைகளை மேம்படுத்தும் நோக்குடனும் தொழில்சந்தையில் நிலவும் இயக்கவாற்றல் மிக்க கேள்வியைப் பூர்த்திசெய்வதற்காகவும் “13 வயது வரை அனைவருக்கும் கட்டாயக் கல்வி” மற்றும் “அண்மையிலுள்ள பாடசாலை மிகச் சிறந்த பாடசாலை” ஆகிய நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன
- 2019 யூனில் உயர் கல்வி (தர உத்தரவாத மற்றும் அங்கீகரித்தல் ஆணைக்குழு) மசோதா வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுடன் தொடர்பான ஆர்வலர்களுக்கு அவர்களின் கருத்துக்களையும் அவதானிப்புக்களையும் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டன



- 13 வயது வரை அனைவருக்கும் கட்டாயக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரச துறையின் தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகள் படவரைகலை வடிவமைப்பு, கட்டடவாக்கம், வெப்தள வடிவமைப்பு, ஊர்திகள் பற்றிய கல்வி மற்றும் மின்னியல் பாடநெறிகளில் 798 மாணவர்களைச் சேர்த்துக் கொண்டன




உலக சுகாதார அமைப்பு இலங்கை தொடர்பில் பின்வருவனவற்றைப் பிரகடனம் செய்திருக்கிறது

- எச்ஐவி என அறியப்படும் மனித பாலியல் நோய் தொற்று தாயிலிருந்து சேய்க்கு பரவுவதனையும் மேக நோயினையும் இல்லாதொழித்த நாடு
- சின்னம்மை தொற்றினை ஒழித்திருப்பதுடன் றுபெல்லாவினைக் கட்டுப்படுத்தியிருக்கிறது




- டெங்கு, காசநோய், விஷக்காய்ச்சல் போன்ற குறிப்பிட்ட தொற்றுநோய்களின் சுமையினை இன்னமும் தாங்கிக் கொண்டிருக்கிறது
- கொவிட்-19, 2020இல் இலங்கையில் மிகக் கடுமையான சுகாதாரக் கரிசனைகளைத் தோற்றுவித்திருக்கிறது. இது சமூக பொருளாதாரத் துறைகளிலும் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தினை ஏற்படுத்தும்
- தீவிரமானதும் கடுமையானதுமான தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அரசாங்கம் பல்வேறுபட்ட இடர்நேர்வுக் குறைப்பு, நுணுக்கமாக நோய்களைக் கண்டறியும் ஆய்வு மற்றும் சுகாதாரக் கல்வி மற்றும் சுகாதார ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது

**நலம் மற்றும் கல்வி மீதான அரசாங்கத்தின் செலவினம்**




மூலம் : நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

# வறுமையை ஒழிக்கும் நோக்குடன் அரசாங்கம் சமூக உதவி நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்தும் விரிவாக்கியது...

| தலைக்குரிய வறுமை விகிதம் (சதவீதம்) | | | | | |
|---|---|---|---|---|---|
| துறை | 2002 | 2006/07 | 2009/10 | 2012/13 | 2016 |
| **இலங்கை** | **22.7** | **15.2** | **8.9** | **6.7** | **4.1** |
| நகரம் | 7.9 | 6.7 | 5.3 | 2.1 | 1.9 |
| கிராமம் | 24.7 | 15.7 | 9.4 | 7.6 | 4.3 |
| பெருந்தோட்டம் | 30.0 | 32.0 | 11.4 | 10.9 | 8.8 |

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

- தொடர்பான காலப்பகுதியில் வறுமை எண்ணிக்கை விகிதம் வீழ்ச்சியடைந்த போதும் பெரும் எண்ணிக்கையான மக்கள் வறுமைக்கோட்டிற்கு சற்று மேலேயே வாழ்கின்றனர்
- 2019 ஓகத்தில் 433,594 குடும்பங்களுக்கு புதிதாக சமுர்த்தி நன்மைகள் வழங்கப்பட்டன.
- இப்புதிய குடும்பங்களைச் சேர்த்துக் கொள்ளப்பட்டமையின் மூலம் சமுர்த்தி நன்மைகளைப் பெறுகின்ற இலங்கையரின் வீட்டலகுகளினது எண்ணிக்கை ஏறத்தாழ 35 சதவீதமாகக் காணப்படுகிறது

**முக்கிய நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் - நன்மைபெறும் குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் கொடைகளின் பெறுமதி**

| ஆண்டு | திவிநெகும / சமுர்த்தி மானிய நிகழ்ச்சித்திட்டம் | | சத்துணவு முற்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம் | | உலர் உணவு நிகழ்ச்சித்திட்டம் |
|---|---|---|---|---|---|
| | குடும்பங்கள் (எண்ணிக்கை) (அ) | பெறுமதி (ரூ.மில்லியன்) (ஆ) | பயனாளர்கள் (எண்ணிக்கை) (அ) | பெறுமதி (ரூ.மில்லியன்) | பெறுமதி (ரூ.மில்லியன்) |
| 2015 | 1,453,078 | 39,994 | 101,200 | 2,422 | 118 |
| 2016 | 1,407,235 | 40,740 | 337,554 | 5,746 | 111 |
| 2017 | 1,388,242 | 39,707 | 372,407 | 5,408 | 84 |
| 2018 | 1,384,021 | 39,239 | 329,047 | 5,490 | 58 |
| 2019 | 1,800,182 | 44,660 | 300,246 | 5,279 | 105 |


(அ) ஆண்டின் இறுதியில் உள்ளவாறு
(ஆ) மண்ணெண்ணெய் மானியம் உள்ளடங்கலாக

*மூலங்கள்:* சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு

# 2020ஆம் ஆண்டுப்பகுதியில் பணவீக்கம் பரந்தளவிற்கு தாழ்ந்த மட்டங்களிலேயே தொடர்ந்தும் காணப்பட்டது. எனினும் 2019இன் இறுதிப்பகுதியில் நிரம்பல் தூண்டலில் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது

- முதன்மைப் பணவீக்கம் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் பொதுவாக அதிகரித்துச் செல்லும் போக்கினைக் காட்டியது
- கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2018 இறுதியின் 2.8 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 4.8 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2017இற்குப் பின்னர் மிக உயர்ந்த அதிகரிப்பினைப் பதிவுசெய்து 2018இன் 0.4 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 6.2 சதவீதத்திற்கு அதிகரித்தது
- மையப் பணவீக்கம் வீடமைப்பு வாடகையில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக 2019 சனவரியில் உயர்வடைந்ததெனினும் அதன் பின்னர் பெரும்பாலும் நடு ஒற்றை இலக்க மட்டத்திலேயே காணப்பட்டது

முதன்மைப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு)





*மூலம்* : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

- கம்பனி துறையின் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் 2019இல் நடு ஒற்றை இலக்க மட்டத்திற்குக் கீழேயே தொடர்ந்தும் காணப்பட்டு முதன்மைப் பணவீக்கத்தின் போக்குடன் நன்கு இசைந்து காணப்பட்டது
- பொதுவான விலை மட்டங்களின் மீது கூலிகளிலிருந்து தோன்றிய கேள்வி அழுத்தங்கள் 2019இல் குறைவடைந்து காணப்பட்டன

# அத்தியாயம் 5


## வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

# 2019இல் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தனவெனினும் அவை சிறிதளவிலேயே காணப்பட்டன...





- **ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 11,940 மில்லியனுக்கு 0.4 சதவீதத்தினால் அதிகரித்தன:**
  - கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரிதத வேளையில் வேளாண்மை மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் வீழ்ச்சிகண்டன.
- **ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு பின்வருவன மூலம் பெறப்பட்டது:**
  - புடவைகள் மற்றும் ஆடைகள் (5.2%)
  - இரத்தினக்கற்கள், வைரங்கள், ஆபரணங்கள் (10.0%)
  - போக்குவரத்துச் சாதனங்கள் (21.3%)
  - விலங்குத்தீன் (19.7%)
  - தெங்கு (6.0%)
- **குறைப்புக்கள் பின்வருவனவற்றில் பதிவுசெய்யப்பட்டன:**
  - தேயிலை (-5.7%)
  - வாசனைத்திரவியங்கள் (-13.2%)
  - பெற்றோலிய உற்பத்திகள் (-16.2%)
  - தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி (-30. %)
- **ஐ.அமெரிக்கா இலங்கை ஏற்றுமதிகளின் முக்கிய வாங்குநராக (26%) தொடர்ந்தும் விளங்கிய வேளையில் ஐக்கிய இராச்சியம் (8%) மற்றும் இந்தியா (6%) என்பன அடுத்த இடங்களில் காணப்பட்டன.**

## ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு - 2019





*மூலம்* : இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

## நாடுகளின்படி ஏற்றுமதிகள்





*மூலம்* : இலங்கைச் சுங்கம்

# 2019இல் இறக்குமதிகள் மீதான செலவினம் கணிசமான குறைப்பினைப் பதிவுசெய்தமைக்கு நடைமுறைக்கிடப்பட்ட கொள்கை வழிமுறைகளின் தூண்டுதலே முக்கிய காரணமாகும்...





- **இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 19,937 மில்லியனுக்கு 10.3 சதவீதத்தினால் குறைவடைந்தது.**
  - அனைத்து முக்கிய வகைகளினதும் இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தன
- **குறைந்த இறக்குமதிகளுக்கு பின்வருவன வழிவகுத்தன:**
  - தனியாள் ஊர்திகள் (-48.2%)
  - எரிபொருள் (-6.3%)
  - அரிசி (-88.0%)
  - தங்கம் (-99.4%)
  - அடிப்படை உலோகங்கள் (-17.6%)
- **பின்வருவனவற்றில் அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டன:**
  - புடவை மற்றும் புடவைப்பொருட்கள் (1.8%)
  - மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் (3.9%)
  - கனிப்பொருள் உற்பத்திகள் (34.1%)
- **இலங்கையின் முக்கிய இறக்குமதி நாடுகளாக சீனாவும் இந்தியாவும் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தியதுடன் (ஒவ்வொன்றும் 20%) அதனைத் தொடர்ந்து ஐக்கி அரபு எமிரேட்ஸ் காணப்பட்டது (8%)**

## இறக்குமதிகளின் உள்ளமைப்பு - 2019




*மூலம்* : இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

## நாடுகளின்படி இறக்குமதிகள்





*மூலம்* : இலங்கைச் சுங்கம்


# முன்னைய ஐந்து ஆண்டுகளாக தொடர்ச்சியாக விரிவடைந்த வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறை 2019இல் கணிசமானளவில் சுருக்கமடைந்தது...

- 2019இல் **வர்த்தகப் பற்றாக்குறை** 2018இன் ஐ.அ.டொலர் 10,343 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 7,997 மில்லியனுக்கு **ஐ.அ.டொலர் 2,346 மில்லியனால் குறைவடைந்தது**
- **மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வர்த்தகப் பற்றாக்குறை** 2018இன் 11.7 சதவீதத்திலிருந்து 2019இல் **9.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது**
- ஏற்றுமதி (-6.3%), இறக்குமதி (4.8%) இரண்டினதும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் 2018 உடன் ஒப்பிடுகையில் 2019இல் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக **வர்த்தக மாற்று விகிதம்** 2019இல் 103.9 இற்கு **1.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது**

**ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் வர்த்தகப் பற்றாக்குறை (ஐ.அ.டொலர் பில்.)**





**வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகச் சுட்டெண்கள்**




# உயிர்த்த ஞாயிறு தாக்குதலினைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்த சுற்றுலாத் துறையிலிருந்தான வருமானம் அதன் பின்னர் படிப்படியாக மீட்சியடைந்தது…

- 2019இன் 1ஆம் காலாண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் முன்னொருபோதுமில்லாத மிக உயர்ந்த காலாண்டு வருகையினைப் பதிவுசெய்தன
- எனினும் **உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்** காரணமாக 2019 ஏப்பிறல் இறுதியிலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன
- இதன் விளைவாக, 2019இல் **சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 18.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன**
  - **2019: 1,913,702**
  - 2018: 2,333,796
- **சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்** ஐ.அ.டொலர் 3.6 பில்லியனுக்கு 17.7 சதவீதத்தினால் **வீழ்ச்சியடைந்தன**
- கொள்கைப் பக்கத்தில் எடுக்கப்பட்ட **மிகச் சிறந்த நடவடிக்கைகளின்** காரணமாக 2019 இறுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் படிப்படியாக மீட்சியடைந்த வேளையில் உள்ளூர் பாதுகாப்பு நிலைமைகள் அதிகரிக்கப்பட்டதுடன் வியாபாரங்களுக்கும் சுற்றுலா ஊக்குவிப்புக்களுக்கும் நிதியியல் உதவிகள் வழங்கப்பட்டன
- எனினும், **கொவிட்-19** தொற்று தற்பொழுது சுற்றுலாப் பயணிகளின் வருகையினை ஸ்தம்பித நிலைக்குக் கொண்டு வந்துள்ளது.

**மாதாந்தச் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் - 2019**




**சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்**




*மூலம்* : இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

# பணிகள் கணக்கின் மிகையும் தொழிலாளர் பணவனுப்பல்களும் மிதமடைந்த வேளையில் முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை 2019இல் பெரும்பாலும் மாற்றமின்றிக் காணப்பட்டது…

- **2019இல் பணிகள் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 2,849 மில்லியனுக்கு மிதமடைந்தது** (2018: ஐ.அ.டொலர் 3,766 மில்லியன்)

**சுற்றுலாப் பயணிகளின் வருவாய்கள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் 2019இல் போக்குவரத்துப் பணிகள் மிதமடைந்தன:**

- சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் **17.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன**
- 2019இல் போக்குவருத்துப் பணிகளின் உட்பாய்ச்சல்கள் **ஐ.அ.டொலர் 2,339 மில்லியனாகக்** காணப்பட்டன (2018இல்: ஐ.அ.டொலர் 2,486 மில்லியன்)
- கணனிப் பணிகள் துறை (தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளல்) தொடர்ந்தும் ஆரோக்கியமான வீதத்தில் வளர்ச்சியடைந்து 2019இல் **ஐ.அ.டொலர் 899 மில்லியனாகக்** காணப்பட்டன (2018: ஐ.அ.டொ 848 மில்.)

- **முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை 2019இல் ஐ.அ.டொலர் 2,426 மில்லியனுக்குச் சிறிதளவால் விரிவடைந்தது** (2018: ஐ.அ.டொலர் 2,385 மில்லியன்)

**முதலாந்தர வருமானக் கணக்கிலிருந்தான வெளிப்பாய்ச்சலில் ஏற்பட்ட முக்கிய அதிகரிபபிற்குப் பின்வருவன காரணங்களாக அமைந்தன:**

- நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளினால் செய்யப்பபட்ட அதிகரித்தளவிலான பங்கிலாபக் கொடுப்பனவுகள்
- நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீதான அதிகரித்த நறுக்குக் கொடுப்பனவுகள்

**எனினும், கடன்கள் மற்றும் படுகடன் பிணையங்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2018 உடன் ஒப்பிடுகையில் சிறிதளவால் மாத்திரமே அதிகரித்துள்ளன**

- **தொழிலாளர் பணவனுப்பல்களும் கூட மிதமடைந்தன…**


தொழிலாளர் பணவனுப்பல்கள் **4.3 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 6,717 மில்லியனுக்கு** வீழ்ச்சியடைந்தமைக்கு (2018: ஐ.அ.டொலர் 7,015 மில்லியன்) மத்திய கிழக்கு பொருளாதாரங்களில் நிலவிய புவிசார் அரசியல் நிகழ்வுகளின் தாக்கமே காரணமாக அமைந்தது

# பொதுவாக, வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட கணிசமான சுருக்கத்துடன், வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2019இல் கணிசமாக வீழ்ச்சியடைந்தது...


**2019இல் நடைமுறைக் கணக்கின் உள்ளமைப்பு:**

- **வர்த்தகப் பற்றாக்குறை: ஐ.அ.டொலர் 7,997 மில்லியன்**
  (2018: ஐ.அ.டொலர் 10,343 மில்லியன்)
- **பணிகள் கணக்கு மிகை: ஐ.அ.டொலர் 2,849 மில்லியன்**
  (2018: ஐ.அ.டொலர் 3,766 மில்லியன்)
- **முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை: ஐ.அ.டொலர் 2,426 மில்லியன்**
  (2018: ஐ.அ.டொலர் 2,385 மில்லியன்)
- **இரண்டாந்தர வருமானக் கணக்கு மிகை: ஐ.அ.டொலர் 5,766 மில்லியன்**
  (2018: ஐ.அ.டொலர் 6,163 மில்லியன்)

## வர்த்தக நிலுவை




## வர்த்தக நிலுவை, நடைமுறைக் கணக்கு நிலுவை மற்றும் திரண்ட நிலுவை




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

## நடைமுறைக் கணக்கு நிலுவை

**-2.8** ஐ.அ.டொ. பில்லியன் (2018)

**-1.8** ஐ.அ.டொ. பில்லியன் (2019)

**கொவிட்-19 தொற்று 2020இல் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையில் குறிப்பிடத்தக்களவு விரிவினைத் தோற்றுவிக்கும் போல் தெரிகிறது...**

# அரசாங்கத்தினால் குறிப்பிடத்தக்களவு படுகடன் மீள்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கிடையிலும் 2019இல் உயர்ந்த உட்பாய்ச்சல்களின் காரணமாக நிதியியல் கணக்கு மேம்பட்டது...


## 2019இல் நிதியியல் கணக்கிற்கான முக்கிய உட்பாய்ச்சல்கள்:

- ஐ.அ.டொலர் 4.4 பில்லியன் தொகை கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் இரண்டு வழங்கல்கள்
- ஐ.அ.டொலர் 1.6 பில்லியன் கொண்ட அரசாங்கக் கடன் உட்பாய்ச்சல்கள்
- முதலீட்டுச் சபைக் கம்பனிகளுக்கான கடன்கள் உட்பட ஐ.அ.டொலர் 1.2 பில்லியன் கொண்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள்
- ஐ.அ.டொலர் 327 மில்லியன் கொண்ட ப.நா.நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஆறாவது மற்றும் ஏழாவது தொகுதிகள்


## 2019இல் நிதியக் கணக்கிலிருந்தான முக்கிய வெளிப்பாய்ச்சல்கள்:

- ஐ.அ.டொலர் 1.7 பில்லியன் கொண்ட அரச வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவுகள்
- ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் கொண்ட இரண்டு முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவுகள்
- ஐ.அ.டொலர் 333 மில்லியன் (தேறிய) கொண்ட அரச பிணையங்கள் (திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள்)
- தேசிய சேமிப்பு வங்கியினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 250 மில்லியன் கொண்ட முதிர்ச்சியடைந்த பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவுகள்

### நிதியியல் கணக்கு: முக்கய உட்பாய்ச்சல் மற்றும் தேறிய வெளிப்பாய்ச்சல்




### நிதியியல் கணக்கு (தேறிய)





*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

# 2019 இறுதியில் சென்மதி நிலுவை திரண்ட மிகையினைப் பதிவுசெய்த வேளையில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் அதிகரித்தன...

- **திரண்ட நிலுவை**
  - **2019: ஐ.அ.டொலர் 377 மில். கொண்ட மிகை**
  - 2018: ஐ.அ.டொலர் 1,103 மில். கொண்ட பற்றாக்குறை
- **மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்**
  - **2019: ஐ.அ.டொலர் 7.6 பில்லியன் (4.6 மாத இறக்குமதிகள்)**
  - 2018: ஐ.அ.டொலர் 6.9 பில்லியன் (3.7 மாத இறக்குமதிகள்)

**மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள்**




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

- **2019 இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்கு நிலைமை அதிகரித்தமைக்கு பின்வருவன காரணங்களாகும்:**
  - **இரண்டு புதிய நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகள் கிடைக்கப் பெற்றமை**
  - **பன்னாட்டு நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் இரண்டு தொகுதிகள் கிடைக்கப் பெற்றமை**
  - **உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவு செய்யப்பட்டமை**

**மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்**

**7.6**
ஐ.அ.டொ.
பில்லியன் (2019)


**6.9** ஐ.அ.டொ. பில். (2018)

# 2019இல் இலங்கை ரூபா 0.6 சதவீதத்தினால் உயர்வடைந்தது…

- 2018இன் கடுமையான தேய்விற்குப் பின்னர் சில தற்காலிகத் தளம்பல்கள் காணப்பட்டமைக்கிடையிலும் 2019இல் ரூபா சரிசெய்யப்பட்ட தன்மையொன்றினை எடுத்துக்காட்டியது
- மத்திய வங்கி 2019இல் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 387 மில்லியனை ஈர்த்துக் கொண்டது (2018: ஐ.அ.டொலர் 1.12 பில்லியன் கொண்ட தேறிய நிரம்பல்)
- 2019இல் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் அதிகரித்ததெனினும் அவை தள ஆண்டு மட்டங்களுக்குக் கீழேயே தொடர்ந்தும் காணப்பட்டன
- எனினும், கொவிட்-19 தொற்றின் பரவல் காரணமாக செலாவணி வீதம் 2020 மாச்சு மற்றும் ஏப்பிறலில் குறிப்பிடத்தக்க தளம்பல்களைக் கொண்டிருந்தது

## செலாவணி வீத அசைவுகள்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

# அத்தியாயம் 6

## இறைக்கொள்கையும் அரச நிதியும்

ஆண்டறிக்கை 2019

தொகுதி I

இலங்கை மத்திய வங்கி

## 2019-2020 நடுப்பகுதியில் அரசாங்கம் பல சுற்றுக்களைக் கொண்ட இறைத் தளர்த்தல் வழிமுறைகளை முன்னெடுத்தது…

- **உயர்ந்த ஞாயிறுத் தாக்குதலின் பேரழிவுத் தாக்கங்களுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் வழிமுறைகள் ஆரம்பிக்கப்பட்டன**
  - சுற்றுலா விடுதிகள் மற்றும் சுற்றுலாத் தொழிற்பாட்டாளர்கள் மீதான பெறுமதிசேர் வரி வீதம் 15 சதவீதத்திலிருந்து 7 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது
  - பாதுகாப்புச் சாதனங்களின் இறக்குமதி மீது வரி விலக்களிக்கப்பட்டது


- **தொடர்ச்சியாகக் காணப்பட்ட சராசரிக்கும் குறைவான பொருளாதார வளர்ச்சியைக் அதிகரிப்பதற்காக சனாதிபதி தேர்தலின் பின்னர் எடுக்கப்பட்ட வழிமுறைகள்**
  - 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான திருத்தங்கள்
  - நிதியியல் பணிகள் தவிர்ந்தவற்றிற்கான பெறுமதிசேர் வரி வீதம் 8 சதவீதத்திற்குப் பரந்தளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளமை
  - தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் பிடித்துவைத்தல் வரி அகற்றப்பட்டுள்ளமை
  - மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள் இரண்டினதும் மீதான அரச செலவினங்கள் கட்டுப்படுத்தப்பட்டமை

- **கொவிட்-19 தொற்றிற்குப் பதிலிறுத்தும் விதத்தில் முன்னெடுக்கப்பட்ட வழிமுறைகள்**
  - சுகாதார வசதிகளுக்குத் தேவையான செலவின ஒதுக்குகளின் ஏற்பாடு
  - அத்தகைய உணவு விடயங்களுக்கு உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் விதிக்கப்பட்டமை
  - சமூக இடைவெளிக் காலப்பகுதியில் உணவுப்பொருட்களின் விநியோகத்திற்கு வசதியளித்தமை
  - நோய்த் தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள்
  - தொகைப்படியொன்றாக குறைந்த வருமானம் பெறும் மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்காக ரூ.5,000 இனை வழங்குகின்ற காசுக் கொடைத் திட்டமொன்று நடைமுறைக்கிடப்பட்டமை

# அரசின் அரசிறை பெயரளவு மற்றும் மொ.உ.உற்பத்தியின் சதவீதம் ஆகிய இரண்டு நியதிகளிலும் வீழ்ச்சியடைந்தது...

- 2019இல் அரச அரசிறை, 2018இன் மொ.உ.உற்பத்தியின் 13.4 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 12.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது
- பெயரளவு நியதிகளில், மொத்த அரசிறை ரூ.1,890.9 பில்லியனுக்கு 1.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது
- வருமான வரிகளிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்களின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்ட போதும் கலால் தீர்வை, பெறுமதிசேர் வரி, சிறப்புப் பண்டத் தீர்வை, செஸ் வரி மற்றும் துறைமுகங்கள், வானூர்தி நிலையங்கள் தீர்வை என்பனவற்றிலிருந்தான குறைந்த அரசிறைச் சேகரிப்பு, அரசிறைச் சேகரிப்பில் வீழ்ச்சியொன்றைத் தோற்றுவித்தது

அரச அரசிறை (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)





மூலம்: நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு

## பெயரளவு நியதிகளிலும் மொ.உ.உற்பத்தியின் சதவீதத்திலும் மொத்தச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் அதிகரித்தமைக்கு, அரச முதலீடுகள் வீழ்ச்சியடைந்தமைக்கிடையிலும் மீண்டெழும் செலவினம் அதிகரித்தமையே காரணமாகும்...

- மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2018இன் 18.7 சதவீதத்திலிருந்து 2019இல் 19.4 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் பெயரளவு நியதிகளில் இது 8.2 சதவீதத்தினால் ரூ.2,915.3 பில்லியனுக்கு அதிகரித்தது

- மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினம் 2018இன் 14.5 சதவீதத்திலிருந்து 2019இல் 15.3 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் பெயரளவு நியதிகளில் மீண்டெழும் செலவினம் 10.1 சதவீதத்தினால் ரூ.2.301.2 அதிகரித்தது
- உதவுதொகைகள் மற்றும் மாற்றல்கள், சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மீதான உயர்ந்த செலவினம் மீண்டெழும் செலவினத்தின் அதிகரிப்பிற்குப் பங்களித்தது
- மூலதனம் மற்றும் தேறிய கடன்வழங்கல் 2018இன் மொ.உ.உற்பத்தியின் 4.2 சதவீதத்திலிருந்து 2019இல் 4.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது




மூலம்: நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு

## 2019இல் முக்கிய இறை மீதிகள் தேய்வடைந்தமைக்கு அரச அரசிறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி, மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட உயர்வு என்பன காரணங்களாயின...

- 2019இல் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை, 2018இன் 5.3 சதவீதத்திலிருந்து (ரூ.760.8 பில்லியன்) 6.8 சதவீதத்திற்கு (ரூ.1,016.5 பில்லியன்) அதிகரித்தது

முக்கிய இறைக் குறிகாட்டிகள் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)




*மூலம்* : நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி


- 2019இல் நடைமுறைக் கணக்கில் பற்றாக்குறை 2018இன் மொ.உ.உற்பத்தியின் 1.2 சதவீதத்திலிருந்து (ரூ.169.7 பில்லியன்) மொ.உ.உற்பத்தியின் 2.7 சதவீதத்திற்கு (ரூ.410.3 பில்லியன்) விரிவடைந்தது

- ஆரம்ப நிலுவை 2018இன் மொ.உ.உற்பத்தியின் 0.6 சதவீதம் கொண்ட மிகையுடன் (ரூ.91.4 பில்லியன்) ஒப்பிடுகையில் 2019இல் மொ.உ.உற்பத்தியின் 0.8 சதவீதம் கொண்ட பற்றாக்குறைக்கு (ரூ.115.1 பில்லியன்) மாற்றமடைந்தது

# 2019இல் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு அரசாங்கம் உள்நாட்டு மூலங்களின் மீதே கூடுதலாக தங்கியிருந்தது…

- 2019இல் மொத்த நிதியிடல் தேவைப்பாட்டில் தேறிய உள்நாட்டு நிதியிடல் 2018இன் 57.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் (ரூ.437.2 பில்லியன்) 69.1 சதவீதத்திற்கு (ரூ.702.4 பில்லியன் பங்களித்தது
  - மொத்தத் தேறிய உள்நாட்டு நிதியிடலில், வங்கியல்லா நிதியிடல் ரூ.509.3 பில்லியனுக்குக் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து 2018இன் 75.0 சதவீதத்துடன் (ரூ.327.8 பில்லியன்) ஒப்பிடுகையில் 2019இல் 72.5 சதவீதத்திற்கு வகைகூறியது
  - வங்கித்தொழில் துறையிலிருந்தான நிதியிடல் 2019இல் ரூ.193.1 பில்லியனாக விளங்கி மொத்தத் தேறிய உள்நாட்டு கடன்பாடுகளில் 27.5 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தியது
- வெளிநாட்டு மூலங்களினூடான தேறிய நிதியிடலின் பங்கு 2018இன் 42.5 சதவீதத்திலிருந்து (ரூ.3,253.5 பில்லியன்) 2019இல் 30.9 சதவீதத்திற்கு (ரூ.314.1 பில்லியன்) குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது


**பற்றாக்குறைக்கு நிதியிடல் (தேறிய)**
**(மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)**




மூலம்: நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு

# மொ.உ.உற்பத்திக்கான மத்திய அரச படுகடன் விகிதம் அதிகரித்து விரிவடைந்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடுவதற்கான உயர்ந்த தேறிய கடன்பாடுகளின் தாக்கத்தினையும் ஒப்பீட்டு ரீதியில் தாழ்ந்த பெயரளவு மொ.உ.உற்பத்தியையும் பிரதிபலிக்கிறது...

வெளிநின்ற மத்திய அரச படுகடன்
(மொ.உ.உற்பத்தியின சதவீதமாக)




மூலங்கள்: நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

- மொ.உ.உற்பத்திக்கான மொத்த வெளிநின்ற மத்திய அரச படுகடன் விகிதம் 2018 இறுதியின் 83.7 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 86.8 சதவீதத்திற்கு அதிகரித்தது
  - மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடனின் பங்கு 2018 இறுதியின் முறையே 42.2 சதவீதம் மற்றும் 41.5 சதவீதங்களிலிருந்து 2019 இறுதியில் முறையே 44.1 சதவீதத்திற்கும் 42.6 சதவீதத்திற்கும் அதிகரித்தது
- பெயரளவு நியதிகளில் மொத்த வெளிநின்ற மத்திய அரச படுகடன் 2019 இறுதியில் ரூ.13,031.5 பில்லியனுக்கு 8.3 சதவீதத்தினால் (ரூ.1,001 பில்லியன்) அதிகரித்தது

# அத்தியாயம் 7

## நாணயக் கொள்கை, வட்டி வீதங்கள், பணம் மற்றும் கொடுகடன்


ஆண்டறிக்கை
2019
தொகுதி I

இலங்கை மத்திய வங்கி

# சராசரிக்கும் குறைவான பொருளாதார வளர்ச்சியை மீளெழுச்சிப்படுத்தும் நோக்குடன் மத்திய வங்கி 2019 மேயில் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையை மேற்கொண்டதுடன் 2019 ஓகத்திலும் 2020 ஆரம்பத்திலும் இதனை மீண்டும் வலுப்படுத்திக் கொண்டது...

- இதற்கு குறைக்கப்பட்ட பணவீக்கம், நன்கு நிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள், ஒப்பீட்டு ரீதியில் உறுதியான வெளிநாட்டுத் துறை மற்றும் உலகளாவிய ரீதியில் அதிகளவிற்கு தளர்த்தப்பட்டு வருகின்ற நாணயக் கொள்கை என்பன உதவியாக அமைந்தன
- கொவிட்-19 தொற்றின் பரவல் காரணமாக பொருளாதார நடவடிக்கைக்கு உதவியளிக்கும் விதத்தில் மத்திய வங்கி 2020 மாச்சிலும் ஏப்பிறலிலும் நாணயக் கொள்கையினை தளர்த்தியது

**2019 மாச்சிலிருந்து 2020 ஏப்பிறல் தொடக்கம் வரையான காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கி கொள்கை வீதங்களை மொத்தமாக 200 அடிப்படைப் புள்ளிகளினாலும் நியதி ஒதுக்கு விகிதத்தினை 2.0 சதவீதப் புள்ளிகளினாலும் குறைத்தது**





- *நடுத்தர காலப்பகுதியில் பணவீக்கத்தினை நடு ஒற்றை இலக்க மட்டத்தில் சமநிலைப்படுத்தும் நோக்குடன் நெகிழ்ச்சித்தன்மை கொண்ட பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் மத்திய வங்கி நாணயக் கொள்கையினை மேற்கொண்ட வேளையில் பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த வளர்ச்சியை அடைவதற்கு ஆதரவளித்தது*

# கொள்கை வீதக் குறைப்புக்களுக்கு மத்தியிலும் சந்தை வட்டி வீதங்களை கீழ்நோக்கி குறைப்பதில் காணப்பட்ட இணக்கமற்ற தன்மை காரணமாக மத்திய வங்கி வட்டி வீதங்களின் மீது உச்சஎல்லையொன்றினை விதித்தது…


- நிதிச் செலவுகளைக் குறைக்கும் நோக்குடன் 2019 ஏப்பிறலில் மத்திய வங்கி வைப்பு வீதங்களின் மீது உச்சஎல்லையொன்றினை விதித்த வேளையில் உள்நாட்டுப் பணச் சந்தையில் போதுமான திரவத்தன்மை மட்டங்களைப் பேணியது
- எனினும், கடன்வழங்கல் வீதங்களை கீழ் நோக்கிக் குறைப்பதில் தொடர்ந்தும் இணக்கமற்ற தன்மை காணப்பட்டமையின் காரணமாக தற்காலிக வழிமுறையொன்றாக 2019 செத்தெம்பரில் உரிமம்பெற்ற வங்கிகளின் கடன்வழங்கல் வீதங்கள் மீது மத்திய வங்கி உச்சஎல்லையொன்றினை விதித்த வேளையில் வைப்புக்கள் மீதான உச்சஎல்லையைப் புறக்கீடு செய்தது
- இதன் விளைவாக, சந்தைக் கடன்வழங்கல் வீதங்கள் படிப்படியாக வீழ்ச்சியடையத் தொடங்கின
- 2019ஆம் ஆண்டுப்பகுதியில் அரச பிணையங்கள் மீதான விளைவுகள் கணிசமாக வீழ்ச்சியடைந்தன

**உள்நாட்டுப் பணச் சந்தையில் ரூபாத் திரவத்தன்மை மற்றும் திரவததன்மை முகாமைத்துவம்**





மூலம் : இலங்கை மத்திய வங்கி

**வர்த்தக வங்கி கடன்வழங்கல் மற்றும் வைப்பு வீதங்கள்**




மூலம் : இலங்கை மத்திய வங்கி

**முதலாந்தரச் சந்தை திறைசேரி உண்டியல் விளைவுகள்**





மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) ஏலங்களில் ஏற்றுக்கொள்ளப்படாமை, மற்றும் தொடர்பான முதிர்வுக்காலங்களில் வழங்கப்படாமை போன்றவற்றால் சில வாரங்களிற்கான விளைவு வீதங்களின் விபரம் கிடைக்கப்பெறவில்லை

# 2019இல் நாணயக் கூட்டுக்களின் வளர்ச்சி குறைவடைந்தது…


- **2019இல் மாச்சில் நியதி ஒதுக்கு விகிதம் 1.00 சதவீதப் புள்ளியினால் குறைக்கப்பட்டமையின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ஒதுக்குப் பணம் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் சுருக்கத்தினைப் பதிவுசெய்தது**
- **வங்கித்தொழில் முறைமையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட மிதமான வளர்ச்சியின் காரணமாக 2019ஆம் ஆண்டுப்பகுதியில் விரிந்த பணத்தின் வளர்ச்சி ($M_{2b}$) தொடர்ந்தும் குறைவடைந்தது**
  - வங்கித்தொழில் முறைமையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் இவ்வாண்டுப்பகுதியில் மெதுவான வேகத்தில் விரிவடைந்தமைக்கு தனியார் துறை மற்றும் அரச துறை இரண்டிற்கும் வழங்கப்பட்ட கொடுகடன் மெதுவடைந்தமையே காரணமாகும்
  - வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2019இல் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன

**நாணயக் கூட்டுக்களின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி**




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

**உள்நாட்டுக் கொடுகடனில் ஏற்பட்ட ஆண்டு அதிகரிப்பு**




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி


# 2019இல் வங்கித்தொழில் முறைமையினால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் தொடர்ந்தும் அதிகரித்த போதும், இது 2018 உடன் ஒப்பிடுகையில் மெதுவான வேகத்திலேயே காணப்பட்டது...

- வங்கித்தொழில் முறைமையின் அரசிற்கான தேறிய கொடுகடன் 2018இன் ரூ.348.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.250.4 பில்லியனால் அதிகரித்தது

- உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அரசிற்கான தேறிய கொடுகடன் அதிகரித்தது
  - இதற்கு இவ்வாண்டுப்பகுதியில் வர்த்தக வங்கிகளுடனான அரசாங்கத்தின் மேலதிகப் பற்று நிலுவைகளில் வீழ்ச்சி காணப்பட்ட போதும், அரச பிணையங்களின் முதலீடுகள் அதிகரித்தமையே காரணமாகும்

- மத்திய வங்கியின் அரசிற்கான தேறிய கொடுகடன் சுருக்கமடைந்தது
  - இதற்கு பணச் சந்தையின் திரவத்தன்மை மேம்பட்டமையின் காரணமாக மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் வீழ்ச்சியடைந்தமையினால் அரச பிணையங்களின் உடமைகள் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும்

**மத்திய வங்கி வசமுள்ள அரச பிணையங்கள் மற்றும் அரசிற்கான தற்காலிக முற்பணங்கள்**




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

# 2019ஆம் ஆண்டுப்பகுதியில் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளினால் வங்கித்தொழில் முறைமையிலிருந்து பெறப்பட்ட கொடுகடனும் அதிகரித்ததெனினும் அது 2018 உடன் ஒப்பிடுகையில் மெதுவான வேகத்திலேயே காணப்பட்டது...

- 2019இன் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் கடன்பாடுகள் ரூ.62.6 பில்லியன் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்து, 2018இல் ரூ.218.4 பில்லியனால் அதிகரித்த அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான கொடுகடன் விரிவுடன் ஒப்பிடுகையில், 2019இன் இறுதியில் பெரும்பாலான அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிதியியல் நிலைமைகள் தேய்வடைந்தமையினை ஓரளவிற்குப் பிரதிபலித்தது
  - வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை மின்சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் என்பனவற்றினால் பெறப்பட்ட கொடுகடன் இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்து, நலிவடைந்த நிதியியல் செயலாற்றத்தினைப் பிரதிபலித்தது.
  - எனினும், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனம் என்பன உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான அவற்றின் பொறுப்புக்களில் மொத்தமாக ரூ.5.7 பில்லியனை இவ்வாண்டில் மீளச்செலுத்தின


**முக்கிய அரச கூட்டுத்துதாபனங்களினால் பெறப்பட்ட கொடுகடன் - 2019 (ரூ.மில்.)**

| அரச கூட்டுத்தாபனம் | 2018-திசெ | 2019-திசெ | மாற்றம் (19-திசெ/18-திசெ) |
|---|---|---|---|
| மொத்தத் தொகை | 755,380 | 817,953 | 62,574 |
| இதில், | | | |
| வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 139,666 | 167,571 | 27,905 |
| இலங்கை மின்சபை | 67,265 | 88,249 | 20,983 |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 293,231 | 307,676 | 14,445 |
| தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 64,949 | 73,450 | 8,502 |
| ஆரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் | 1,882 | 3,670 | 1,788 |
| கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் | 8,959 | 7,035 | (1,924) |
| இலங்கை துறைமுக அதிகாரசபை | 12,803 | 10,919 | (1,884) |
| இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனம் | 15,086 | 13,203 | (1,883) |

## இவ்வாண்டுப்பகுதியில் காணப்பட்ட குறைவடைந்த பொருளாதார நடவடிக்கையினையும் 2019இன் ஆரம்பத்தில் நிலவிய நலிவடைந்த வியாபார நம்பிக்கையினையும் பிரதிபலிக்கின்ற விதத்தில் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வளர்ச்சி 2019இல் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடைந்தது...


- தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2019 இறுதியில் 4.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, 2009 இற்குப் பின்னர் மிகக் குறைந்த ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தது
- எனினும், 2019இன் இறுதிப்பகுதியில் கொடுகடன் பகிர்ந்தளிப்புக்களில் சில மீட்சித்தன்மைகள் அவதானிக்கப்பட்டமைக்கு நாணயக் கொள்கைத் தளர்த்தல் வழிமுறைகளே உதவியாக அமைந்தன
- 2019இல் அனைத்து முக்கிய பொருளாதாரத் துறைகளுக்குமான கொடுகடன் வளர்ச்சி தொடர்ந்தும் குறைவடைந்தது
  - வேளாண்மைக்கான கொடுகடன் வளர்ச்சி 2018 இறுதியின் 14.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 0.2 சதவீதத்திற்குக் கணிசமாகக் குறைவடைந்தது
  - கைத்தொழில் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி 2018 இறுதியின் 15.3 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 3.1 சதவீதத்திற்குக் குறைவடைந்தது
  - பணிகள் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி 2018 இறுதியில் காணப்பட்ட 17.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019 இறுதியில் 3.1 சதவீதத்திற்குக் குறைவடைந்தது
  - 2019இன் முதலரைப்பகுதியில் 20 சதவீதத்திற்கும் மேலாக வளர்ச்சியடைந்த தனியாள் கடன்களும் முற்பணங்களும் 2019 இறுதியில் 11.9 சதவீதம் கொண்ட மிதமான அதிகரிப்பினைப் பதிவுசெய்தன

### வர்த்தக வங்கிகளின்படி தனியார் துறைக்கான கொடுகடன்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

### முக்கிய துறைகளுக்கான தனியார் துறைக் கொடுகடனின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

# அத்தியாயம் 8

## நிதியியல் துறை அபிவிருத்திகள் மற்றும் முறைமை உறுதித்தன்மை

ஆண்டறிக்கை 2019


தொகுதி I

இலங்கை மத்திய வங்கி


# 2019இல் வங்கித்தொழில் துறை மெதுவான வேகத்தில் விரிவடைந்தது...

- வங்கித்தொழில் துறை சொத்துக்களின் குறைந்த வளர்ச்சிக்கு கொடுகடனுக்கான குறைந்த கேள்வியும் அதிகரித்துவரும் செயற்படாக் கடன்களின் காரணமாக வங்கிகள் கடன்வழங்கும் நடைமுறைகளை இறுக்கமாக்கிக் கொண்டமையும் காரணங்களாக அமைந்தன
- தேய்வடைந்த சொத்துக்களின் தரம், தொழிற்பாட்டுச் செலவுகளில் ஏற்பட்ட உயர்வு மற்றும் வரிகளின் அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை கணிசமாக வீழ்ச்சியடைந்தது
- வங்கித்தொழில் முறைமை, மூலதனம் மற்றும் திரவத்தன்மை மட்டத்தினை குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கும் மேலாகப் பேணிக் கொண்டமையானது இத்துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை எடுத்துக்காட்டுகிறது

## வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை விகிதம்





## வங்கித்தொழில் துறையின் மூலதனப் போதுமை



# உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் செயலாற்றம் 2019இல் தேய்வடைந்தது...


- உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் துறையின் செயலாற்றம் தேய்வடைந்தமைக்கு எதிர்க்கணியமான கொடுகடன் வளர்ச்சி, வீழ்ச்சியடைந்த இலாபம் மற்றும் அதிகரித்த செயற்படாக் கடன்கள் என்பனவே காரணங்களாகும்.
- 2019இல் துறையின் இலாபத்தன்மை கணிசமாக வீழ்ச்சியடைந்தமைக்கு அதிகரித்த வட்டியல்லா செலவினங்களும் அதிகரித்துவரும் செயற்படாக் கடன்களுக்கெதிரான உயர்ந்த கடன் இழப்பு ஒதுக்கங்களுமே முக்கிய காரணங்களாகும்.
- உயிர்த்த ஞாயிறு தாக்குதலினைத் தொடர்ந்து பொருளாதார நடவடிக்கைகள் மெதுவடைந்தமை, வீழ்ச்சியடைந்த கடன்வழங்கல் நடவடிக்கைகள் மற்றும் படுகடன் நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் கசியும் தாக்கம் என்பனவற்றின் காரணமாக செயற்படாக் கடன் விகிதம் அதிகரித்தது
- பொதுவாக பார்க்கையில் துறை தொடர்ந்தும் உறுதியாகவே காணப்பட்டது. இதற்கு குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கும் மேலாகக் காணப்பட்ட போதுமான திரவத்தன்மை தாங்கிருப்புக்களுடன் சேர்ந்து மூலதனமும் ஆரோக்கியமான மட்டத்தில் பேணப்பட்டமையே காரணமாகும்

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் இலாபத்தன்மைக் குறிகாட்டிகள்**




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் செயற்படாக் கடன்கள் மற்றும் பாதுகாப்பு ஒதுக்கங்கள்**





*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

# கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை 2019இல் கலப்பான செயலாற்றமொன்றினைக் காட்டியது...

- கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண், சந்தை மூலதனமயமாக்கல், விலை வருவாய் விகிதம் மற்றும் மொ.உ. உற்பத்திகளின் சதவீதமாக சந்தை மூலதனயமாக்கல் ஆகிய நியதிகளில் 2019இல் முன்னேற்றங்களைக் காட்டிய வேளையில் ஸ்டான்டட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண் இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது
- 2019ஆம் ஆண்டுப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல் தொடர்ந்த போதும் அது 2018இலும் பார்க்கக் குறைந்த வீதத்தில் காணப்பட்டது
  - கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் இரண்டாந்தரச் சந்தை 2019இல் ரூ.117 பில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டுப் பாய்ச்சலைப் பதிவுசெய்தது (2018: ரூ.23.2 பில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டுப்பாய்ச்சல் காணப்பட்டது)

**கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண், ஸ்ராண்டட் அன்ட் எஸ்எல் 20 சுட்டெண் மற்றும் நாளாந்த மொத்தப் புரள்வு**




*மூலம்* : கொழும்பு பங்குச் பரிவர்த்தனை

# நடுத்தர கால எறிவுகள், பிரச்சனைகள் மற்றும் சவால்கள்

ஆண்டறிக்கை

2019

தொகுதி I

இலங்கை மத்திய வங்கி

# நடுத்தர கால பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பு – 2020 – 2024(அ)

| குறிகாட்டி | அலகு | 2018 (ஆ) | 2019 (இ) | எறிவுகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
| **உண்மைத்துறை (ஈ)** | | | | | | | | |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 3.3 (இ) | 2.3 | 1.5 | 4.5 | 6.0 | 6.2 | 6.5 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உ. | ரூ.பில் | 14,366 (இ) | 15,016 | 15,925 | 17,466 | 19,443 | 21,690 | 24,245 |
| தலைக்குரிய மொ.உ.உ. | ஐ.அ.டொ. | 4,079 (இ)(உ) | 3,852 | 3,940 | 4,166 | 4,473 | 4,813 | 5,190 |
| மொத்த முதலீடு | மொ.உ.உ. இன் % | 30.4 (இ)(ஊ) | 27.4 | 26.8 | 27.3 | 27.8 | 28.1 | 28.4 |
| உள்நாட்டு சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 23.0 (இ)(ஊ) | 21.3 | 20.7 | 21.3 | 22.5 | 23.6 | 24.5 |
| தேசிய சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 27.3 (இ)(ஊ) | 25.3 | 23.7 | 24.7 | 25.6 | 26.2 | 26.8 |
| **வெளிநாட்டுத்துறை** | | | | | | | | |
| வர்த்தக இடைவெளி (ஈ) | மொ.உ.உ. இன் % | -11.7 | -9.5 | -7.7 | -9.8 | -9.7 | -9.5 | -9.2 |
| ஏற்றுமதிகள் | ஐ.அ.டொ.மில் | 11,890 | 11,940 | 8,740 | 11,117 | 12,421 | 13,594 | 15,380 |
| இறக்குமதிகள் | ஐ.அ.டொ.மில் | 22,233 | 19,937 | 15,415 | 20,135 | 22,092 | 23,815 | 26,135 |
| நடைமுறை கணக்கு நிலுவை (ஈ) | மொ.உ.உ. இன் % | -3.2 | -2.2 | -3.1 | -2.6 | -2.2 | -1.9 | -1.6 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் | இறக்குமதி மாதங்கள் | 3.7 | 4.6 | 5.6 | 4.6 | 4.6 | 4.6 | 4.6 |
| **இறைத் துறை (ஈ)** | | | | | | | | |
| மொத்த அரசிறை மற்றும் கொடைகள் | மொ.உ.உ. இன் % | 13.5 (எ) | 12.6 | 9.8 | 11.8 | 13.5 | 14.1 | 14.5 |
| செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் | மொ.உ.உ. இன் % | 18.7 (எ) | 19.4 | 17.7 | 18.6 | 19.1 | 19.2 | 19.4 |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ. இன் % | -1.2 (எ) | -2.7 | -5.1 | -3.6 | -2.1 | -1.5 | -1.0 |
| முதன்மை நிலுவை | மொ.உ.உ. இன் % | 0.6 (எ) | -0.8 | -2.8 | -1.0 | 0.5 | 0.7 | 1.1 |
| திரண்ட வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை | மொ.உ.உ. இன் % | -5.3 (எ) | -6.8 | -7.9 | -6.8 | -5.6 | -5.2 | -4.9 |
| மத்திய அரச படுகடன் | மொ.உ.உ. இன் % | 83.7 (எ) | 86.8 | 92.4 | 89.4 | 84.3 | 80.5 | 76.3 |
| **நாணயத் துறை மற்றும் பணவீக்கம்** | | | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) (ஏ) | % | 13.0 | 7.0 | 9.3 | 12.9 | 12.7 | 12.5 | 12.5 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ($M_{2b}$ இல்) (ஏ) | % | 15.9 | 4.3 | 4.0 | 10.0 | 12.2 | 13.0 | 13.0 |
| ஆண்டுச்சராசரிப் பணவீக்கம் (ஐ) | % | 4.3 | 4.3 | 4.5 | 5.0 | 5.0 | 5.0 | 5.0 |

(அ) 2020 மார்ச்சு வரை கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாக கொண்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 அடியாண்டு)
(உ) அண்மைய குடித்தொகை எண்ணிக்கைகளுடன் புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள்
(ஊ) 2018இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்த முதலீடு, உள்நாட்டு சேமிப்புக்கள் மற்றும் தேசிய சேமிப்புக்கள் என்பனவற்றை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் முறையே 28.6%, 21.2% மற்றும் 25.4% ஆக திருத்தியமைத்துள்ளது.
(எ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2020 மார்ச்சு 31இல் வெளியிடப்பட்ட 2018 இற்கான திருத்தப்பட்ட மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது.
(ஏ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(ஐ) கொ.நு.வி.சுட்டெண் (2013=100) அடிப்படையிலானது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

# பிரச்சனைகளும் சவால்களும்...

1. **அதிகரிக்கின்ற வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகள்** நடுத்தர காலத்தில் இலங்கையின் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கு இடர்நேர்வினைத் தோற்றுவிக்கக்கூடும் என்பதனால் நாட்டிற்கான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களை அதிகரிப்பதற்கு அவசரமான வழிமுறைகள் தேவைப்படுகின்றன.

2. கொவிட்-19 தொற்றின் காரணமாக அண்மைக் காலத்தில் தவிர்க்க முடியாமல் போன இறை நழுவல்களைத் தொடர்ந்து, நடுத்தர காலத்தில் **இறைத்திரட்சியை வலுப்படுத்துவதற்கான** வழிமுறைகள் இன்றியமையாதனவாகக் காணப்படுவதுடன், அத்தகைய தூண்டுதலளிக்கும் நன்மைகளை எதிர்பார்த்திருக்கும் பொருளாதார பங்கேற்பாளர்களுக்கு வினைத்திறனுடனும் காத்திரமான முறையிலும் கடத்த வேண்டியதன் அவசியத்தினையும் எடுத்துக்காட்டுகின்றது

3. உள்நாட்டு உற்பத்தியை உயர்த்துவதும் **பிராந்திய மற்றும் உலகளாவிய பெறுமதிச் சங்கிலியில் பங்கேற்பினை** அதிகரிப்பதும் இலங்கையின் முதற்பண்டங்களின் ஏற்றுமதி விலைகளின் குறிப்பிடத்தக்க தளம்பல்களுக்கு மத்தியிலும் அதன் பெறுமதித் துறையின் செயலாற்றத்தினை வலுப்படுத்துவதும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்

4. உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட்-19இன் தொற்று என்பனவற்றின் பின்னடைவுகளுக்கு அப்பால் நோக்குகையில், நடுத்தர காலத்தில் சுற்றுலாத் தொழில் துறையினை மேம்படுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும் இலங்கையின் **சுற்றுலாத் தொழில் துறை புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவது** அவசியமாகின்றது

# பிரச்சனைகளும் சவால்களும்...

5. இலங்கை அதன் வளர்ச்சி உள்ளார்ந்த வளத்தினை அதிகரிப்பதற்கு, தேசிய போட்டித்தன்மையினை மேம்படுத்துவதனை வலியுறுத்துவதுடன் கூடிய அனைத்தையுமுள்ளடக்கிய **தேசிய கைத்தொழில் கொள்கையொன்றை** நடைமுறைக்கிடுவதும் **தேசிய கொள்கைகள் தொடர்ச்சியாகப் பின்பற்றப்படுவதனை** உறுதிப்படுத்துவதும் இலங்கைக்கு இன்றியமையானதவாகும்

6. தாழ்ந்த உற்பத்தித்திறனினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் தயாரிப்புத் துறை, இத்துறையில் மெதுவான வளர்ச்சியையும் **உலகளாவிய சந்தைகளில் இலங்கையின் ஏற்றுமதிகளின் தாழ்ந்த போட்டித்தன்மையினையும்** தோற்றுவித்துள்ளமையானது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினூடாக தொழிற்படையின் தரத்தினை மேம்படுத்துவதற்கான அவசியத்தினையும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதனையும் வலியுறுத்துகிறது.

7. சமூக மற்றும் மனித மூலதன அபிவிருத்தித் துகைளில் கடந்த காலத்தில் அடையப்பட்ட சாதனைகளுக்கு மத்தியிலும் பொருளாதாரத்தின் வருமான அந்தஸ்தில் ஏற்பட்ட உயர்வு நவீன சவால்களைக் கொண்டு வந்திருக்கிறது. இது **உயர்ந்ததும் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சி உத்வேகத்திற்கு வசதியளிப்பதற்கு போதுமான விதத்தில் தொழிற்படை வலுவூட்டப்பட்டிருக்கின்றதா என்பதனை மதிப்பிடுவதனைத் தேவைப்படுத்துகிறது**

8. **வேளாண்மை உற்பத்திகளுக்கான களஞ்சியப்படுத்தல் வசதிகள் போதுமானளவில் இல்லாமையும்** வேளாண்மைப் பண்டங்களுக்கான நிதியிடல் தேர்வுகள் போதாமையும் உணவு விலைகளில் கடுமையான தளம்பல்களைத் தோற்றுவித்திருப்பதுடன் உற்பத்தியாளர்களுக்கான பண்ணை விலைகளையும் குறைத்திருக்கிறது

# பிரச்சனைகளும் சவால்களும்...

9. **உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்** விரைவானதும் அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியையும் உறுதிப்படுத்துவதில் கணிசமான பங்கினை வகித்தமைக்கிடையிலும் அவற்றில் பலவற்றின் முன்னேற்றங்கள் **கடந்த அண்மைய ஆண்டுகளில் மெதுவடைந்திருப்பது தனியார் துறையின் ஈடுபாடுகளை** ஊக்குவிப்பதனை தேவைப்படுத்துகின்ற அதேவேளையில் அத்தகைய செயற்றிட்டங்களில் காணப்படக்கூடிய ஏதேனும் எதிர்க்கணிய வெளிப்புறத் தாக்கங்களையும் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்

10. வலு உருவாக்கக் கலப்பு தொடர்பான நிலையான கொள்கையூடாக **வலுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதும்** நீண்ட கால வலு உருவாக்க விரிவாக்கத் திட்டமொன்றனைச் சரியான நேரத்தில் நடைமுறைப்படுத்துவதும் பொருளாதாரத்தின் மீதான நிதியியல் சுமையினைக் குறைக்கின்ற வேளையில், பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்துவதற்கும் மிக இன்றியமையாததாகும்

11. **செயலாற்றும் குன்றிய அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள்** அரசாங்கத்திடமிருந்தான நிதியியல் உதவிகளில் பெருமளவிற்குத் தங்கியிருப்பது தேசிய வரவு செலவுத்திட்டத்திற்குத் தொடர்ந்தும் சுமையாக விளங்குவதனால் அத்தகைய அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தொடர்பில் சீர்திருத்தங்களைச் செய்வது தவிர்க்க முடியாததாகும்.

12. ஒழுங்கற்ற வானிலைத் தன்மைகள் மற்றும் நீருக்கான அதிகரித்த கேள்வி என்பனவற்றின் காரணமாக இலங்கையில் கடுமையான கரிசனைக்குரியதாக மாறியுள்ள பாதுகாப்பான நீர், சொட்டு நீர்ப்பாசன முறைமைகள் மற்றும் மழைநீரைப் பயன்படுத்துகின்ற தொழில்நுட்பம் என்பன **உள்ளிட்ட மேம்பட்ட நீர்முகாமைத்துவ உபாயங்களை அவசரமாக நடைமுறைக்கிட** வேண்டிய தேவையினை உடனடியாக மேற்கொள்வது அவசியமாகும்.

# பிரச்சனைகளும் சவால்களும்...

13. **காலநிலை மாற்றங்களின் இடர்நேர்வுகளுக்கு இலங்கை பாதிக்கப்படுகின்ற தன்மை விரைந்து** உயர்வடைந்து வருவது அரச வரவு செலவுத்திட்டத்தின் மீதான குறிப்பிடத்தக்கச் சுமைக்குக் காரணமாவதனால் சூழல் ரீதியான வரிச் சீர்திருத்தங்கள் மற்றும் பசுமை நிதியிடல் முன்னெடுப்புக்கள் போன்ற சீர்திருத்தங்களின் மூலம் அவற்றைக் கட்டுப்படுத்துவது அவசியமாகும்

14. **அடிக்கடி ஏற்படும் வழங்கல்பக்க இடையூறுகளின் காரணமாக ஏற்படும் விலை அழுத்தங்கள்** தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கத்தினைப் பேணும் மத்திய வங்கியின் முயற்சிகளின் மீது சுமையினை ஏற்படுத்தக்கூடும் என்பதனாலும் உணவுப் பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு நாணயக் கொள்கை சிறந்த கருவியாக அமையாது என்பதனாலும் இறைக் கொள்கையின் ஆதரவு இதற்குத் தேவைப்படுகின்றது

15. **நாணய ஊடுகடத்தல் செய்முறைகளில் காணப்படும்** நியாயமற்ற தாமதங்கள் நாணயக் கொள்கை வழிமுறைகளை உண்மைப் பொருளாதாரத்திற்குள் நாணயக் கொள்கை வழிமுறைகள் சென்றடையும் வினைத்திறனுக்குத் தொடர்ந்தும் முட்டுக்கட்டையாக விளங்கியது

16. **இலங்கை தாழ்ந்த வட்டி வீத அமைப்பொன்றிற்குள்** மாறிச் செல்வதனால், சேமிப்பாளர்களின், குறிப்பாக மூத்த பிரசைகளின் வாழ்க்கைத்தரத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு **நியாயமான வருமானத்துடன் புதிய நிதியியல் சாதனங்கள் அறிமுகப்படுத்துவது** இன்றியமையாததாகும்

17. பொருளாதார வளர்ச்சிக்கு வசதியளிக்கும் விதத்தில் நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் இயலாற்றலையும் உயர்த்தும் பொருட்டு, **நிதியியல் துறையின் திரட்சியை மேம்படுத்துவதற்கு** முன்கூட்டிய செயற்பாடு சார்ந்ததும் சரியான நேரத்திலுமான வழிமுறைகள் தேவைப்படுகின்றன

# பிரச்சனைகளும் சவால்களும்...


18. இலங்கை “புதிய கொழும்பு” அபிவிருத்தியுடன் இலங்கை உலகளாவிய நிதியியல் மையமாக மாறுவதற்கான ஆர்வத்தினைக் கொண்டிருப்பதனால் **நிதியியல் துறையின் வினைத்திறனையும் ஆழத்தினையும் அதிகரிப்பது இன்றியமையாததாக மாறியுள்ளது**

19. மக்களினதும் பொருட்களினதும் போக்குவரத்தினூடாக உலகின் மற்றைய பாகங்களுடன் இலங்கை அதிகரித்தளவில் இணைக்கப்பட்டு வருவதன் காரணமாக, கொவிட்-19 தொற்றின் விரைந்த பரவலினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு **கண்காணிப்புடன் கூடிய தனிமைப்படுத்தி வைப்பதற்கான ஒத்திசைவான கொள்கைக் கட்டமைப்பொன்றினை நடைமுறைக்கிடுவது இன்றியமையாததாகும்**

20. கொவிட்-19 தொற்று பரவல் மற்றும் ஏனைய அவசர கால நிலைமைகள் போன்ற தீங்குகளிலிருந்து தோன்றுகின்ற சமூக பொருளாதாரத் தாக்கங்களைக் கையாளும் விதத்தில் **அனர்த்த முகாமைத்துவ திட்டங்களையும் சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் வலுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகிறது**

21. **கொவிட்-19 தொற்றும்** அதனைத் தொடர்ந்து தனிப்பட்ட நாடுகளினாலும் உலகளாவிய ரீதியிலும் அதற்குக் காட்டப்பட்ட பதிலிறுப்புக்களும் கொள்கைப் பதிலிறுப்புக்களை அவசியமாக்கிய **உள்ளார்ந்த பலயீனங்களின் பிரசன்னத்தினை** எடுத்துக்காட்டின. இவை கடந்த காலத்தில் காணப்பட்ட நெருக்கடியான நிகழ்வுகளின் போது அவதானிக்கப்பட்டவற்றிலிருந்தும் கணிசமானளவிற்கு வேறுபட்டனவாகவுள்ளன.
    - தொற்றின் பன்முகத்தன்மை கொண்ட தாக்கத்தினை எதிர்கொள்வதற்காக குறுங்காலத்தில் அநேக நாடுகளும் பாதுகாப்பான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டியிருந்த போதும், நீண்ட காலத்தில் அனைத்து நாடுகளும் மாற்றியமைக்கப்பட்டதொரு வடிவத்திலேனும் உலகமயமாக்கலை மீண்டும் வரவேற்க வேண்டிய நிலையிலேயே காணப்படுகின்றன போல் தோன்றுகிறது

# சிறப்புக் குறிப்புக்கள்



# சி2: கொவிட்-19 உம் இலங்கையும்: சவால்கள், கொள்கை பதிலிறுப்புக்கள் மற்றும் தோற்றப்பாடு

- 2019இன் பிற்பகுதியில் சீனாவில் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட கொவிட்-19 தொற்று மிக விரைவாக உலகம் முழுவதும் பரவியதுடன் உலக சுகாதார அமைப்பு உடனடியாக இதனை தொற்றுநோய் எனப் பிரகடனம் செய்திருக்கிறது
- இலங்கை இதுவரை உள்நாட்டில் இந்நோய் பரவுவதனை ஒப்பீட்டு ரீதியில் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியிருக்கின்ற வேளையில், இவ்வாண்டுப்பகுதியில் இலங்கையின் பொருளாதாரத்தின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை இது கொண்டிருக்கும் போல் தோன்றுகிறது.

## இலங்கை மீதான பொருளாதாரத் தாக்கம்

- உள்நாட்டில் தொற்றின் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகள் பல முக்கிய பொருளாதாரத் துறைகள் மீது பாதிப்பினை ஏற்படுத்தும்
- இலங்கையின் ஏற்றுமதிப் பங்காளர்களிடையே இது அதிகரித்து வருவதும் நாட்டின் ஏற்றுமதிகளை மெதுவாகவும் விரைவாகவும் பாதிக்கும் போல் தெரிகிறது
- தற்போதைய தொற்று நீண்ட காலம் காணப்படுமாயின் சுற்றுலாத் தொழில் துறை மீதான மோசமான தாக்கம் மேலும் பெரிதாகும்
- மத்திய கிழக்கு, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் தூரகிழக்கு ஆசியாவிலிருந்தான பணவனுப்பல்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன
- தொற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற சூழல் வெளிநாட்டு நேரடி முதலீட்டுப்பாய்ச்சலைப் பாதித்துள்ளதுடன் படுகடனின் செலவும் அதிகரிக்கிறது
- தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்காக நிதியியல் மூலங்கள் திருப்பிவிடப்படுவதனால் பொருளாதார முன்னேற்றங்கள் மெதுவடையும்


## புத்துயிர்ப்பு வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தல்

### நாணய மற்றும் நிதியியல் துறை வழிமுறைகள்

- கொள்கை வீதங்கள், நியதி ஒதுக்கு விகிதம், வங்கி வீதம் என்பன குறைக்கப்பட்டன
- பல துறைகளுக்கு மீள்கொடுப்பனவு சட்ட இசைவுத் தாமதம்
- ***சௌபாக்கிய கொவிட்-19 மறுமலர்ச்சி வசதிகள்*** *மற்றும்* ***புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம்***
- அத்தியாவசியமல்லாத பொருட்களின் இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்பட்டன
- மூலதன வெளிப்பாய்ச்சலின் மீது தற்காலிக கட்டுப்பாடுகள்
- *வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களிடமிருந்து வெளிநாட்டு நாணய வைப்புக்களை கவர்வதற்காக* ***விசெட வைப்புக் கணக்குகள்***

### எல்லைக் கட்டுப்பாடு மற்றும் நலத் துறைக் கொள்கைகள்

கொவிட்-19



### இறை வழிமுறைகள்

- ***சுற்றுலா, புடவைகள் மற்றும் ஆடைகள், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்*** *துறைகளில் ஈடுபட்டிருக்கும் வியாபாரங்களுக்குச் சலுகைகள்*
- ***தெரிவுசெய்யப்பட்ட*** *அத்தியாவசிய விடயங்களுக்கான மூலப்பொருள் தேவைப்படுத்தல் திட்டத்தின் அறிமுகம்*
- *தாழ்ந்த வருமான குடும்பங்களுக்காக ஒரு தொகைக் கொடுப்பனவாக ரூ.5,000 கொண்ட காசுக் கொடுப்பனவு*
- ***கொடுப்பனவு நிலுவைகளைத்*** *தீர்ப்பனவு* ***செய்வதற்காக நிதியங்களின் ஒதுக்கு***
- **எரிபொருள் விலை சமநிலைப்படுத்தல் நிதியம்** நிறுவப்பட்டமை
- ***பெறுமதிசேர் வரிக் கொடுப்பனவுகளுக்காக*** *வழங்கப்பட்ட* ***சலுகைக் காலம்***

**இலங்கையின் கூட்டுக் கேள்வியின் கணிசமான விகிதத்திற்கு உள்நாட்டுக் கேள்வி வகைகூறுவதனால், உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளினை வழமைக்குக் கொண்டு வருவதற்காக எடுக்கப்படும் வழிமுறைகள் இலங்கை விரைவாக மீட்சியடைவதனை இயலச்செய்யும்**

# சி3: இலங்கையின் பொருளாதார மேலெழுச்சி – தேவையும் அதற்கான தயார்நிலையும்

- 2009இல் உள்நாட்டு மோதல்கள் முடிவடைந்ததுடன், இலங்கை உறுதியான முன்னேற்றத்தினை அடைந்து, அதனைத் தொடர்ந்து வந்த மூன்றாண்டுகளாக 8 சதவீதத்திற்குக் கூடுதலான வளர்ச்சியைப் பதிவுசெய்தது
  - எனினும், தொடர்ந்து வந்த ஆண்டுகளில் காணப்பட்ட குறைவடைந்த பொருளாதார வளர்ச்சியின் காரணமாக முன்னெற்றம் மெதுவடைந்தது

## பிரச்சனைகளும் சவால்களும்

- *இசைந்து செல்லாத இறைத் தொழிற்பாடுகள்*
- *சராசரிக்கும் குறைவான ஏற்றுமதிச் செயலாற்றும் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு*
- *குறைந்த பெண்கள் தொழிற்படைப் பங்கேற்பு மற்றும் குறைந்த தேர்ச்சி பெற்ற தொழிலாளர்*
- *உதவியாயமையாத சட்டக் கட்டமைப்பு*
- *வயது முதிர்ந்த குடித்தொகை*
- *உறுதியற்ற அரசியல் மற்றும் நிச்சயமற்ற கொள்கை*

## கொள்கைகள்

- **இறைத் திரட்சி** மற்றும் ஏனைய சீர்திருத்தங்கள்
- **உற்பத்தி மற்றும்** ஏற்றுமதிச் **சந்தைகளின் பன்முகப்படுத்தல்**
- பல்புடை **உபாய பொருளாதாரப் பங்குடமை**
- **சட்டம், நிறுவன ரீதியான மற்றும் தொழிற்சந்தைச் சீர்திருத்தங்கள்**
- **உயர் தேர்ச்சிமிக்க கல்வியில்** முதலீடு
- **மூன்றாம் நிலைக் கல்வியைப் பரந்தளவில் பெறுவதற்கான வாய்ப்பு**
- **மேம்பட்ட புலமைச் சொத்து உரிமைகளுக்கான** தேவை
- **புத்தாக்கங்களை ஊக்குவித்தல்**
- **முன்னேற்றம் கண்ட உட்கட்டமைப்புக்களை அடைந்து கொள்வதற்கான வழிகளை** மேம்படுத்தல் (உ-ம்: தொலைத்தொடர்பூட்டல்கள், அகன்றபட்டை)
- **தொழில்முயற்சியாண்மையினை உயர்த்துதல்** மற்றும் **வியாபாரம் செய்யுங்களை ஊக்குவித்தல்**
- **தேசிய கொள்கைகளுக்கான** தேவை மற்றும் **நீண்ட காலப் பொருளாதார இலக்குகள் தொடர்பில் இணக்கமான தன்மை**

"நடுத்தர வருமானப் பொறியினை" தவிர்த்துக் கொள்வதற்கும் சமத்துவமானதும் நீடித்துநிலைத்திருக்கக் கூடியதுமான வளர்ச்சியுடன் கூடிய உயர்ந்த வருமான நாடாக மாறும் விதத்தில் மேலெழுச்சியுறுவதற்கும் இலங்கை ஆற்றல் வாய்ந்த பொருளாதாரக் கொள்கைகளை பின்பற்றுவது இன்றியமையாததாகும்

# நன்றி

1950 - 2020 Stability
Sustainability
Shared Prosperity

